# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் கனடாவிலுள்ள பைத்துல் இஸ்லாம் பள்ளிவாயிலில் 13.07.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் பொதுவாக மாநாடுகள் நடைபெற்ற பிறகு மாநாடுகள் தொடர்பாக சில விசயங்களை கூறுவதும், அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பது, அவனது அருள்களை எடுத்துக் கூறுவதும் உண்டு. அல்லாஹ்வின் அருளால் ஒரு வார இடைவெளியில் நடைபெற்ற அமெரிக்கா மற்றும் கனடா மாநாடுகள் கடந்த இரண்டு வாரங்களில் நடைபெற்று முடிந்திருக்கின்றது. எங்கு எனக்கு இந்த மாநாடுகளில் கலந்து கொண்டதன் காரணமாக, குறிப்பாக இந்த ஜமாஅத்துகளுடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கான தவ்ஃபீக் கிடைத்ததோ, அங்கு ஜமாஅத் சகோதரர்களை சந்தித்ததால், பல விசயங்களைப் பற்றியும் எனக்கு தெரிந்துகொள்ள முடிந்தது. அவர்களது பிரச்சனைகள் பற்றி தெரிய வந்தது. ஜமாஅத்தின் நல்லொழுக்க மற்றும் மார்க்க நிலைமை பற்றி தெரிய வந்தது. அதன் காரணமாக ஜமாஅத்திற்கு வழிகாட்டுவது எளிதாகி விடுகின்றது. அவர்களுக்கு வழிகாட்டல் கிடைத்து விடுகின்றது.

இந்த வகையில் அமெரிக்காவிலும் கனடாவிலும் எனது சுற்றுப்பயணம் எனக்கு பயனளிக்கக் கூடியதாக இருந்தது. இந்த சுற்றுப் பயணத்தின் மூலமாக ஜமாஅத்தின் சகோதரர்களுக்கும் பெண்களுக்கும் பலன் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன். துஆவும் செய்கின்றேன். இதைத் தவிர இந்த சுற்றுப் பயணத்தின் மூலம் ஜமாஅத் அல்லாத, முஸ்லிம்கள் அல்லாத அந்த நாட்டிலுள்ள சில புகழ்பெற்ற நபர்களை சந்தித்து அவர்களுக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்த வகையில் இரண்டு இடங்களிலும் இதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ்! இவ்வகையில் இரண்டு இடங்களிலும் நல்ல பணி நடக்கின்றது. இரண்டு ஜமாஅத்துகளும் தமது வெளிப்புற தொடர்புகளை விரிவானதாக ஆக்கியிருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், நான் உங்கள் முன்னால் நான் ஆரம்பத்தில் கூறியதுபோன்று மாநாட்டிற்குப் பிறகு, நான் பொதுவாக கூறுவது போன்று நன்றி செலுத்துதல் தொடர்பான கருத்தை இன்று கூற இருக்கின்றேன். இதற்காக நானும் நீங்கள் அனைவரும் இறைவனுக்கு மிக அதிகமாக நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அவன் நமக்கு ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பினையும், இதில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பினையும் வழங்கியுள்ளான். பிறகு இதில் அவன் பரக்கத் செய்துள்ளான். எல்லா வகையிலும் நல்ல நிலையில் பரக்கத்துடன் இது முடிவுற்றது. அல்ஹம்துலில்லாஹ்!

ஆனால், நான் அமெரிக்காவின் மாநாட்டிலும் கனடாவின் மாநாட்டிலும் கூறியிருந்தது போன்றே இந்த மாநாடுகளின் அசல் நோக்கம் நம்மிடம் தூய மாற்றத்தை உருவாக்குவதாகும். மாநாட்டின் மூலமாக கிடைக்கும் நன்மைகள், பரக்கத்துகள் ஆகியவை நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்தும் போதுதான் உண்மையான முறையில் அவை நமக்கு கிடைக்கும். பிறகு இது தற்காலிக மாற்றமாக இருந்து விடக் கூடாது. மாறாக நிரந்தரமான முயற்சியுடன் தைரியமாக செயல்பட்டு இந்த மாற்றங்களை உங்களது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் இந்த விசயங்களைக் கூறிக் கொண்டே இருக்கின்றேன்.

பிறகு இந்த விசயங்கள்தான் இறைவனுக்கு நன்றி செலுத்துதல் என்ற கருத்தையும் நமக்கு திறந்து தருகின்றது. நன்றி செலுத்துதல் தொடர்பான கருத்து தெளிவாகத் தெரியும் போது அதற்கு பிறகு ஒரு நம்பிக்கையாளர் மேலும் அதிகமாக அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வார். இவ்வாறு மனிதன் மீது ஒரு அருளுக்கு பிறகு இன்னொரு அருள் ஏற்பட்டுக் கொண்டே செல்கிறது.

பிறகு உண்மையான வாக்குறுதிகளை வழங்கக்கூடிய இறைவன் தனது நன்றியுள்ள அடியார்களிடம் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

நீங்கள் எனக்கு நன்றி தெரிவிப்பவர்களாக இருந்தால் நான் மேலும் உங்களுக்கு அதிகமாக வழங்குவேன் என்று அவன் அறிவிப்பு செய்துள்ளான்.

அவனுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களுக்கு அல்லாஹ் தனது அருளை மேலும் அதிகமாக்கி விடுகின்றான். இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை அவன் வழங்கியிருப்பதை விட பெரிதாக ஓர் அஹ்மதிக்கு வேறு என்ன அருட்கொடையும் பேருபகாரமும் இருக்க முடியும்? அது நன்மைகளைச் செய்வது, தூய மாறுதலை உருவாக்குவது ஆகியவற்றின் பக்கம் நமக்கு வழிகாட்டியிருக்கின்றது. நன்றி செலுத்துவது தொடர்பான இந்தக் கருத்தை ஒவ்வொரு அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெறுபவர்களாக நாம் ஆக வேண்டும். அல்லாஹ்வுக்கு நன்றிகேடு காட்டுகின்ற மக்களைச் சேர்ந்தவர்களாக நாம் ஆகிவிடக் கூடாது. இவ்வாறு அல்லாஹ்வின் வெறுப்பிற்கு காரணமானவர்களாக ஆகிவிடக் கூடாது. இந்த நாட்டிற்கு நீங்கள் வந்ததால் உலகியல் ரீதியாகவும் அல்லாஹ் உங்கள் மீது அதிகமாக அருள் செய்துள்ளான். சிலர் மீது இந்த அருள் மிகவும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. பெரும்பாலாரின் நிலைமைகள் இதற்கு முன்பிருந்த நிலைமைகளை விட சிறந்ததாக ஆகியிருக்கின்றது. நான் மாநாட்டிலோ அல்லது எனது சொற்பொழிவிலோ கூறியது போன்று பலருக்கும் அல்லாஹ் அவர்களை இங்கு வந்து சேர்வதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான். அதன் விளைவாக உங்களது உலக நிலைமை சிறப்பாக இருக்கின்றது. இதுவும் அஹ்மதிய்யத்தின் பரக்கத் ஆகும். அஹ்மதிய்யத்தைக் காரணமாக வைத்து இங்கு வந்து, Asylum என்ற நிலையில் தஞ்சம் புகுந்து அவர்களது நிலைமைகள் சிறந்ததாக ஆனதும், ஜமாஅத்தின் மீது ஆட்சேபனைகளைச் செய்ய ஆரம்பித்திருக்கின்ற மக்கள் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு நன்றிகேடு காட்டுபவர்களாகவும் அவனது பார்வையில் வீழ்ச்சியடைந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் ஜமாஅத்தை விட்டும் பிரிந்து, தனியாக சென்று விட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் தொடர்பாக ஜமாஅத்திற்கு அணு அளவு கூட கவலையில்லை.

அப்படிப்பட்டவர்கள் ஜமாஅத்தை விட்டும் பிரிந்து தனியாக செல்ல வைத்திருப்பதும் அல்லாஹ் ஜமாஅத் மீது செய்துள்ள பேரருளாகும். தனது படைப்பின் நோக்கத்தைப் புரிந்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தன்னிடம் தூய மாறுதலை உருவாக்குவதன் மூலம் தான் உண்மையில் இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக ஆக முடியும் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் வைக்க வேண்டும். நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காட்டித்தந்த அந்த அழகிய முன்மாதிரிக்கேற்ப தமது முன்மாதிரியை அமைத்துக் கொள்ள அவர் முயற்சி செய்ய வேண்டும்.

அறிவிப்புகளில் இவ்வாறு வருகின்றது: பெருமானார் (ஸல்) அவர்கள் இரவில் தூங்குவதற்கு முன் அல்லாஹ் பகல் முழுவதும் அவர்கள் மீது செய்துள்ள அருள்களை நினைவு கூறுவார்கள். அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு என் மீது அருளும் பேருபகாரமும் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அவனே எனக்கு வழங்கினான்; மிக அதிகமாக வழங்கினான் என்று கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்து கூறினார்கள். பிறகு இறைவணக்கத்தில் அவர்களது நிலை எவ்வாறு இருந்ததென்றால் தொடர்ந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் அவர்களது பாதங்கள் வீங்கி விடும். நீங்கள் இந்த அளவு கடினத்தை ஏன் மேற்கொள்கின்றீர்கள்? என்று கேட்டதற்கு நான் இறைவனுக்கு நன்றி செலுத்தும் அடியானாக இருக்க வேண்டாமா? என்று அன்னார் பதில் அளித்தார்கள்.

அந்த நன்றி செலுத்தும் அடியாரை ஏற்றுக் கொண்ட அவர்களது உம்மத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது சக்திக்கேற்ப இந்த முன்மாதிரியைப் பின்பற்றி செயல்படுவது அவர்கள் மீது கடமையாகும். அதன் மூலம் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ்வின் அன்பிலிருந்தும் பங்கு பெறுபவர்களாக அவர்கள் ஆக முடியும். இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து இவ்வாறு அறிவிக்கும்படி கூறுகின்றான்.

நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். எனது அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களாகவும், அவனது நேசத்தைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் நீங்கள் ஆகி விடுவீர்கள். அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவது இன்னும் அதிகமாக அவனது அருள்களிலிருந்தும் பங்கு பெறுபவர்களாக உங்களை ஆக்கிவிடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அருள்கள் கிடைத்ததன் காரணமாக மட்டும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்கவில்லை. மாறாக, ஏதாவதொரு துன்பத்திலிருந்து தப்பிப்பதற்காகவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருந்தார்கள். எதுவரையென்றால், சின்னச்சின்ன விசயங்களில் கூட மிக அதிகமாக அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தியிருப்பதைப் பார்க்க முடிகின்றது. அன்றாட பணிகளிலும் அதை தவிர ஒவ்வொரு சமயத்திலும் அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள். இந்த உண்மையான நன்றி செலுத்தும் தன்மை நம்மிடம் ஏற்பட நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நன்றி செலுத்துதலின் விளைவாகவே அல்லாஹ் தனது அருள்களையும் பேருபகாரத்தையும் நம்மீது பன்மடங்கு அதிகமாகப் பொழிகின்றான். எனவே, இறைவனுக்கு நன்றி செலுத்துவது மனிதனின் சுய பயனுக்காகவே இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு நமது நன்றி செலுத்துதலின் எந்தத் தேவையும் இல்லை.

**அல்லாஹ் இது தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

எவர் நன்றி செலுத்தினாலும் அந்த நன்றி செலுத்துதலின் பலன் அவருக்கு தான் கிடைக்கும். எவர் நன்றிகேடு காட்டுகின்றாரோ அவர் அல்லாஹ் எல்லா விதமான நன்றி செலுத்துதலை விட்டும் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான் என்பதை நினைவில் கொள்ளட்டும். ஓர் அஹ்மதி இப்படிப்பட்ட நன்றி செலுத்துதலை வெளிப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

பிறகு நன்றி செலுத்துவதற்கு பல வழிமுறைகள் உள்ளன. அவற்றை ஒவ்வொரு நாளும் எப்போதும் தேடிக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு தேடுகின்ற போது ஓர் அஹ்மதி, ஒரு உண்மையான நம்பிக்கையாளர் உள்ளத்தாலும் நன்றி செலுத்துகின்றார். நாவால் நன்றி கூறுவதன் மூலமாகவும் நன்றி செலுத்தப்படுகிறது. நாவால் அல்லாஹ்வை அவர் புகழ்கின்றார். இவ்வாறு பல வழிமுறைகள் உள்ளன. பிறகு தனது செயல் மற்றும் அசைவு, அசைவின்மை ஆகியவற்றின் மூலமும் நன்றி செலுத்தப்படுகிறது. மனிதன் நன்றி செலுத்த விரும்பினால் அவனது உடலிலுள்ள எல்லா உறுப்புகளும் கூட அதை வெளிப்படுத்துகின்றது. மனிதனுடைய முழு உடலிலும் நன்றி செலுத்தும் இந்நிலை வெளிப்பட வேண்டும். அல்லாஹ் மனிதனின் நன்றி அறிதலை ஏற்றுக் கொள்கிறான் என்பது அவனது அருட்கொடைகள், அவன் செய்கின்ற பேருபகாரங்கள் மூலம் தெரிய வருகிறது. அல்லாஹ்வுக்கு மனிதன் நன்றி செலுத்தும் போது மிகுந்த பணிவை வெளிப்படுத்திக் காட்டியவாறு அவன் முன்னால் குனிந்து விட வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள தனது அன்பை வெளிப்படுத்துவது அவனது அன்பை பெற முயற்சி செய்வது ஆகியவை கூட அவனுக்கு நன்றி செலுத்துவதாகும்.

பிறகு அல்லாஹ் செய்துள்ள அருள்களையும் பேருபகாரங்களையும் நினைத்துப் பார்ப்பது, இது அல்லாஹ்விடமிருந்தே கிடைத்துள்ளது என்பதை புரிந்து கொள்வது அவசியமானதாகும். எனக்கு கிடைத்திருக்கின்ற ஒவ்வொரு அருளும் அல்லாஹ்விடம் இருந்தே கிடைத்துள்ளது என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும். பிறகு அவனது அருள்களுக்காக நாவால் இறைவனை புகழ வேண்டும். அவனை திக்ர் செய்ய வேண்டும். அவன் தந்திருக்கின்ற அருள்களை அவனது திருப்தி கிடைக்கும் வழிகளில் பயன்படுத்த வேண்டும். அவற்றை அல்லாஹ் விரும்பும் வழிகளில் பயன்படுத்த வேண்டும். இந்த விசயங்கள் மூலம் அல்லாஹ்வுக்கு அவன் விரும்புகின்ற விதத்தில் நன்றி செலுத்த முடியும். பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்று இதன் விளைவாக அல்லாஹ் மனிதனுக்கு நன்றியுள்ளவனாக இருக்கின்றான் என்பது அவன் அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் தனது அருள்களை வழங்குவதன் மூலமும் பேருபகாரம் புரிவதன் மூலமும் வெளிப்படுகின்றது. நீங்கள் நன்றி செலுத்துபவராக இருந்தால் நான் இன்னும் உங்களுக்கு வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

மக்கள் எனக்கு கடிதம் எழுதும் போதும், நான் அவர்களை சந்திக்கும் போதும் மாநாட்டில் எங்களுக்கு பெரும் பலன் கிடைத்தது. மிகுந்த இன்பத்தை நாங்கள் பெற்றோம் என்று கூறுகின்றனர். இதன் விளைவாக ஒவ்வொரு அஹ்மதியும் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் முன்பு குனிபவராகவும் அவனுக்கு இபாதத் செய்யக் கூடியவர்களாகவும் ஆகிக் கொண்டே செல்லும்போதுதான் இந்த இன்பமும், பலனும் அவருக்கு பயன் தரக்கூடியதாக இருக்கும். அவர் அல்லாஹ்வின் நேசத்தை ஈர்ப்பதற்காக முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருள்கள், பேருபகாரம், அருட்கொடைகள் ஆகியவற்றின் ஒரு பட்டியலை அவர் தயார் செய்ய வேண்டும். அதை தன் கண் முன்னால் வைக்க வேண்டும். எந்த நன்மைகளை செய்வதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளதோ இதில் நான் நிலைத்திருப்பேன் என்று உறுதியாக அவர் எண்ணம் கொள்ள வேண்டும். தீமைகளின் பட்டியலை தயார் செய்து, பிறகு அத்தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது எல்லா விதமான திறமைகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் மூலம் இந்த முயற்சி இருக்க வேண்டும். பிறகு அல்லாஹ்வின் இந்த பேருபகாரங்களையும் அருட்கொடைகளையும் நினைத்துப் பார்த்து நாவால் இறைவனைப் புகழ்ந்து கொண்டே செல்ல வேண்டும். நான் இறைவனது அருள்களையும் அவன் தந்த அருட்கொடைகளையும் தவறாகப் பயன்படுத்தமாட்டேன் என்ற தனது நிலையில் எப்போதும் அவர் நிலைத்திருக்க வேண்டும்.

நீங்கள் இந்த நாட்டில் வந்ததன் காரணமாக அல்லாஹ் உங்களது நிலையை சிறந்ததாக ஆக்கி விட்டான் என்றால், பொருளாதாரத்தில் விரிவான நிலையை ஏற்படுத்தியுள்ளான் என்றால் அதனை தவறான பணிகளில் பயன்படுத்துவதற்குப் பதிலாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதை பயன்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருளால் அமெரிக்காவில் பலரும் இருக்கின்றனர். அவர்களுக்கு அல்லாஹ் பொருளாதாரத்தில் மிகவும் விரிவான நிலைமையை, வசதியை வழங்கியுள்ளான். அவர்களில் சிலர் மிகவும் தவறான மனதுடன் ஜமாஅத்தின் திட்டங்களுக்காக செலவு செய்கின்றனர். அல்லாஹ் அவர்களது செல்வங்களிலும், உயிர்களிலும் பரக்கத்தை வழங்குவானாக! அவர்கள் எப்போதும் அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூர்ந்தவாறு அல்லாஹ்வின் நன்றியுள்ள அடியார்களாக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். பொருள் தியாகத்தை செய்வதை மட்டும் நீங்கள் நன்றி செலுத்துவதற்கான வழிமுறையாகக் கருதி விடாதீர்கள். மாறாக, அல்லாஹ்வின் முன்பு குனிவதற்கும் மிக அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். உண்மையான முறையில் நன்றி செலுத்துவதற்கும் ரஹ்மானின் அடியாராக ஆவதற்கும் இபாதத் செய்பவராக இருப்பதும் அவசியமானதாகும். அமெரிக்காவைப் போன்று பொருளாதார வசதியில் விரிவான நிலையில் இருப்பவர்கள் கனடாவில் இல்லை. அல்லது குறைந்தபட்சம் எனது அறிவில் அப்படிப்பட்டவர்கள் இல்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது இங்கு பொருள் தியாகத்தின் தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. ஆனால் அத்துடன் செயல் அளவில் சில பலவீனங்கள் உள்ளன. இபாதத்திலும் பலவீனங்கள் இருக்கின்றன.

இறைவனுக்கு உண்மையான முறையில் நன்றி செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்றால் இந்த பலவீனங்களை அகற்ற வேண்டியது அவசியமானதாகும். அமெரிக்காவில் இருக்கும் அஹ்மதிகளாயினும் சரி, கனடாவில் வசிக்கின்ற அஹ்மதிகளாயினும் சரி, உலகில் எந்த இடத்தில் வாழ்கின்ற அஹ்மதிகளாயினும் சரி முழுமையான முறையில் தங்களிடம் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்யும் போதுதான் உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக அவர்கள் ஆக முடியும். எதுவரை நீங்கள் திருக்குர்ஆனின் கட்டளைகளை செயல்படுத்த முயற்சி செய்யாமல் இருக்கின்றீர்களோ, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்து கொண்ட பைஅத் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கேற்ப செயல்பட நீங்கள் முயற்சி செய்வதில்லையோ, அதுவரை நீங்கள் அல்லாஹ்வுக்கு உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக ஆக முடியாது. நன்றி செலுத்துவதில் இந்தத் தரத்தை அடைவதற்கு அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் நல்வாய்ப்பினை வழங்குவானாக!

எனவே, உங்களை ஆய்வு செய்து பாருங்கள். உங்களது சுற்றுச்சூழலின் பக்கம் பார்வையை செலுத்துங்கள். உங்களது வீட்டை பாருங்கள். இந்த நன்றி செலுத்துதல் உங்களது சுற்றுச்சூழலிலும்,

உங்களது வீட்டிலும் எந்த அளவு உங்களிடையே நிலைபெற்றுள்ளது என்று பாருங்கள். கணவன் – மனைவிக்குரிய உரிமையைச் செலுத்தாமல் இருந்தால் அவர் ஏனைய நன்மைகளைச் செய்து வந்தாலும் அவர் உண்மையான முறையில் நன்றி செலுத்துபவராக ஆக முடியாது. அல்லாஹ் அவருக்கு மனைவியை வழங்கியுள்ளான். குழந்தைகளை தந்துள்ளான். அவர்களுக்குரிய உரிமையை செலுத்துவது அவரது பொறுப்பாகும். இது இறைவன் அவர் மீது சுமத்தியுள்ள பொறுப்பாகும். இது ஓர் உலக பொறுப்பு அல்ல. மாறாக, அல்லாஹ் அவர் மீது சுமத்தியுள்ள பொறுப்பாகும். இவ்வாறே மனைவிகள் தங்களது கணவர்களுக்குரிய உரிமையை செலுத்தாமல் இருந்தால் அவர்களும் இறைவனது அருள்களுக்கு நன்றி செலுத்தாமல் இருக்கின்றனர். இறை அருள்களை மறுப்பவர்களாக அவர்கள் இருப்பதால் இந்த மறுக்கும் தன்மை அவர்களை நன்றி செலுத்தும் அடியார்களின் பட்டியலிலிருந்து வெளியேற்றி விடுகின்றது.

எனவே, நான் ஏற்கனவே கூறியது போன்றே ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு குடும்பமும் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. எந்த நாளில் நாம் எல்லா நிலையிலும் நமது சொல்லையும் செயலையும் இறைவனது திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கான வழியாக ஆக்கிக் கொள்வோமோ அந்த நாளில்தான் உண்மையான முறையில் நன்றி செலுத்துவதன் உண்மையான வடிவம் உருவாக முடியும். பிறகு அப்படிப்பட்ட ஒவ்வொரு மனிதன் மீதும் மார்க்க அளவிலும் உலக அளவிலும் அல்லாஹ்வின் அருள்கள், பேருபகாரங்கள் ஆகியவற்றின் எல்லையற்ற தொடர் ஆரம்பமாகி விடும். உலக ரீதியான வசதிகளை மட்டும் போதுமானதாக கருதாதீர்கள். ஓர் அஹ்மதி ஆன்மீகத்திலும் முன்னேற வேண்டும்.

நன்றி செலுத்துதல் என்ற கருத்துக்களில் என்னுடன் சம்பந்தப்பட்ட கருத்துக்களையும் நான் கூறுகின்றேன். இதுவும் அவசியமானதாகும். முதலாவதாக, நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன். அவன், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எப்படிப்பட்ட ஜமாஅத்தை வழங்கியுள்ளான் என்றால், அதற்கு அல்லாஹ்வுடன் அளவுகடந்த, கலப்பற்ற மனத்தூய்மை மற்றும் பற்றின் தொடர்பு இருக்கின்றது. பேரன்பு, அளவுகடந்த பற்று ஆகியவை நிறைந்த எத்தகைய உறவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து அருளைப் பெற்றவர்கள் ஆரம்பித்து வைத்தார்களோ, அதை பார்த்து விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஜமாஅத் சகோதரர்களின் கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவற்றை பார்த்து விட்டு நமக்கு வியப்பாக இருக்கின்றது. இந்த சொற்கள் என்னுடையதாகும். ஏறக்குறைய இதே சொற்களில் அவர்கள் இந்தக் கருத்தைக் கூறியிருந்தார்கள். வியக்கத்தக்க அளவிலுள்ள இந்த கலப்பற்ற மனத்தூய்மை மற்றும் பற்றின் இந்தத் தொடர் ஏறக்குறைய 115 வருடங்களாக இருந்து வருகிறது. இன்றும் அது தனது அழகைக் காட்டுகின்றது. இந்த கலப்பற்ற மனத்தூய்மையையும், பற்றையும் ஒருபோதும் மரணிக்க விட்டு விடாதீர்கள். உங்களது சந்ததிகளில் இதனை நீடிக்கும்படி செய்ய முயற்சி செய்யுங்கள். இந்த கலப்பற்ற மனத்தூய்மையும், பற்றும் எங்கு என்னை இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவனாக ஆக்கியவாறு அவனை புகழ்வதன் பக்கம் எனக்கு கவனமூட்டுகிறதோ, இனி வரக்கூடிய கலீஃபாக்களுக்கும் இதன் பக்கம் இது கவனமூட்டும். அத்துடன் ஜமாஅத் சகோதரர்களையும் இது நன்றி செலுத்துவதன் பக்கம் கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் கிலாஃபத்துடன் உள்ள தொடர்பு வலுவாகவும் அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கும் வகையிலுள்ள உறவும் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்க வேண்டும்.

ஏற்கனவே நான் கூறியது போன்றே நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். அவன் ஜமாஅத்தின் கலப்பற்ற மனத்தூய்மையையும் பற்றையும் நிலைத்திருக்கும்படி செய்துள்ளான். உலகின் எந்தவொரு மூலைக்கு நீங்கள் சென்றாலும் இந்த உறவு ஒவ்வொரு அஹ்மதியிடமும் தென்படும். இதன் காட்சிகளை இந்த சுற்றுப் பயணத்தின் போது நான் அமெரிக்காவிலும் பார்த்தேன். இங்கும் பார்க்கின்றேன். குழந்தைகளிடத்திலும், பெரியவர்களிடத்திலும், ஆண்களிடமும், பெண்களிடமும், இளைஞர்களிடமும், முதியவர்களிடமும் இந்த உறவை நான் பார்க்கின்றேன்.

அமெரிக்கா தொடர்பாக அங்கு பௌதீக சிந்தனையுடையவர்கள் மட்டுமே உள்ளனர்; மார்க்கத்துடன் அவர்களுக்கு இந்த அளவு அதிக தொடர்பு இல்லை என்று உலகம் நினைக்கின்றது. ஆனால் எந்த அளவு

கலப்பற்ற மனத்தூய்மையுடனும் பற்றுடனும் அங்குள்ள அஹ்மதிகள் உள்ளனர் எனில், கடந்த இரண்டு வார காலக்கட்டத்தில் எங்கு நான் இருந்தாலும் அங்கு வந்து தங்களது கலப்பற்ற மனத்தூய்மையையும் பற்றையும் வெளிப்படுத்திக் காட்டினர். டியூட்டி கொடுக்கக் கூடிய இளைஞர்கள் இரு வாரங்களாக நிரந்தரமாக என்னுடன் இருந்தவாறு தங்களது வியாபாரம், தொழில் ஆகியவற்றைக் கூட முற்றிலும் விட்டு விட்டு வந்திருந்தனர். அவர்கள் அதுபற்றி முற்றிலும் கவலைப்படவில்லை. எங்களது வேலை புதிதாக ஆரம்பமாகி இருந்தது. மாநாட்டிற்காகவும் உங்களை சந்திப்பதற்காகவும் எங்களுக்கு விடுப்பு கிடைக்காமல் இருந்ததால் நாங்கள் அவற்றை விட்டு விட்டு வந்து விட்டோம் என்று சிலர் என்னிடம் கூறினர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் எளிதான நிலைமையை ஏற்படுத்துவானாக! மேலும் இவர்களது செல்வங்கள், உயிர்கள், கலப்பற்ற மனத்தூய்மை ஆகியவற்றில் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக!

இந்தக் கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவை அல்லாஹ்வை புகழ்வதன் பக்கம் நம்மை கொண்டு செல்கிறது. அத்துடன் எவர்கள் மிகுந்த கலப்பற்ற மனத்தூய்மையுடனும் பற்றுடனும் மாநாட்டின் போது பல்வேறு துறைகளில் டியூட்டி கொடுத்தார்களோ அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கனடாவிலும், அமெரிக்காவிலும் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும். நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் இவர்கள் மத்தியில் அமைதியின்மை உருவாகுவதற்குப் பதிலாக இவர்களுக்கு எத்தகைய நிம்மதி கிடைக்க வேண்டும் என்றால், எத்தகைய அருள்கள் இவர்கள் மீது இறங்க வேண்டும் என்றால், முன்பை விட அதிகமாக இவர்களுக்கு மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைக்க வேண்டும். இதன் பக்கம் அவர்களுக்கு கவனம் ஏற்பட வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள பல்வேறு நகரங்களுக்கு நான் சென்றேன். இந்த எல்லா இடங்களிலும் பழைய உள்ளூர் அமெரிக்கர்களும் தங்களது மனத்தூய்மை மற்றும் பற்றை வெளிப்படுத்திக் காட்டினர். வெளி இடங்களிலிருந்து புதிதாக வந்தவர்களும் தங்களது மனத்தூய்மை மற்றும் பற்றை வெளிப்படுத்திக் காட்டினர் என்பதை உறுதியாக என்னால் கூற முடியும். ஆனால், இந்த அனைத்து மக்களுக்கும் நான் மீண்டும் இந்த விசயத்தின் பக்கம் கவனமூட்டுகின்றேன். இதைத்தான் நான் ஆரம்பத்தில் கூறினேன். நீங்கள் நன்றி செலுத்துவதம், அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பதும் எப்போது சரியாக இருக்கும் என்றால், உங்களது கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டுவது எப்போது உண்மையாக இருக்கும் என்றால், அவற்றை நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வது, அவனை வணங்குவதில் உயர்வான தரத்தை அடைவது ஆகியவற்றால் வடிவமைக்க வேண்டும்.

நான் நன்றி செலுத்துதல் தொடர்பாக ஆரம்பித்த இந்த கருத்தின் முடிவு என்னவென்றால், காலத்தின் கலீஃபாவும், ஜமாஅத் சகோதரர்களும் அல்லாஹ்வை உண்மையான முறையில் வணங்கக்கூடியவர்களாக ஆகி, நன்றி செலுத்துவதற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். இந்த முறை அமெரிக்காவில் குறிப்பாக இளைஞர்களிடத்திலும், இப்படிப்பட்ட பல்வேறு படித்தரத்தில் உள்ளவர்களிடத்திலும், ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைப்பதிலும், இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதிலம் கவனம் ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது. அல்லாஹ்வின் அருளால் இவர்கள் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். ஆனால் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இந்த தொடர்புகள் மூலமாக நாம் உலகப் பயன்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த தொடர்புகளை நாம் ஏற்படுத்தவில்லை. மாறாக முழு உலகையும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றி தெரிவித்து நாம் உலகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும் இன்ஷா அல்லாஹ். அதற்காகவே நாம் இந்த தொடர்புகளை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

அங்கு பிரஸ்ஸில் எனது நேர்காணல் இருந்தது. அங்கு CNN TV –ன் பிரதிநிதி என்னிடம் அமெரிக்காவில் இஸ்லாம் பரவுவதற்கான என்ன சாத்தியக்கூறுகள் உள்ளன? என்று கேட்டார். நான் அவரிடம் இதைத்தான் கூறினேன். உண்மையான இஸ்லாத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்து வைத்திருக்கின்றது. அது அமெரிக்காவில் மட்டுமின்றி முழு உலகிலும் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள்

இருக்கின்றன. ஏனென்றால், இது தீவிரவாதத்தால் அல்ல. மாறாக உள்ளங்களை வெற்றி கொள்வதன் மூலமே இது பரவும். இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துரைப்பதன் மூலம் பரவும் என்று கூறினேன்.

கிலாஃபத்துடன் கலப்பற்ற மனத்தூய்மையுடனும் பற்றுடனும் தொடர்பு வைத்து, அதை வெளிப்படுத்திக் காட்டுகின்ற இளைஞர்களும், பெண்களும், நமது நோக்கம் பௌதீக வெற்றி அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நமக்கு இருக்கின்ற பௌதீக தொடர்புகளும், நாம் பேசுகின்ற ஒவ்வொரு விசயமும் இஸ்லாத்தின் வெற்றியின் பக்கம் நம்மை கொண்டு செல்லும் வழிகளைப் பற்றிய சிந்தனையை உடையதாக இருக்க வேண்டும். நம்மை படைத்த ஏகனான தனித்த அந்த இறைவனுடன் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பின் மூலமாகவே இது நடக்கும். பொதுவாக உலகிலுள்ள தலைவர்களை சந்திக்கும்போது நான் இந்த விசயத்தைத்தான் கூறுகின்றேன்.

எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது குறிப்பாக எனது அமெரிக்கா சுற்றுப்பயணம் மிகவும் நன்றாக இருந்தது. அல்லாஹ் இதன் நல் விளைவுகளை இதற்குப் பிறகும் வெளிப்படுத்திக் கொண்டே செல்வானாக!

சில இடங்களில் புதிதாக வாங்கப்பட்ட பள்ளிவாசல்கள், சென்டர்கள் ஆகியவற்றின் துவக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. அமெரிக்காவிலுள்ள ஜமாஅத்துகளுக்கு பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. இதனை அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். இரண்டாவது விசயம் என்னவென்றால், முன்னேறுகின்ற சமுதாயங்கள் நாம் இந்த இந்த பணிகளை செய்து விட்டோம் என்பதை மட்டும் பார்க்காமல், அதில் குறைகள் இருந்தால் அதன் பக்கமும் அதன் பார்வை இருக்கும். அந்த குறைகளை அகற்றுவது அவசியமானதாகும். அப்போதுதான் சரியான வழியை நிர்ணயம் செய்து கொள்ள முடியும். அப்போது தான் சரியான வழிகாட்டல் நமக்கு கிடைக்கும். குறிப்பாக இது, அமெரிக்காவில் நடந்தாலும் சரி, கனடாவில் நடந்தாலும் சரி, வேறு எங்கு நடந்தாலும் சரி, ஆண்டு மாநாடுகளின் போது இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு ரெட் புக் இருக்க வேண்டும். அதில் இந்த குறைகள் பற்றி நீங்கள் எழுதியிருக்க வேண்டும். எவர்களிடம் இல்லையோ அவர்கள் இந்த புக்கை வைக்க வேண்டும். நான் நீண்ட நாட்களாக உலகிற்கு இந்த எச்சரிக்கையை விடுத்து வருகின்றேன். உதாரணமாக, அமெரிக்காவின் அரசியல், சமுதாய மற்றும் பொருளாதார நிலை எவ்வாறு ஆகலாம் என்றால், அதனால் ஏற்படும் கவலைகளிலிருந்தும் தப்பிப்பதற்கு வீட்டிலும் ஜமாஅத் அளவிலும் சில ஏற்பாடுகள் இருக்க வேண்டும். அமெரிக்காவில் பெரும்பாலும் இயற்கை சீற்றங்கள், புயல்காற்று போன்றவை வந்து கொண்டிருக்கின்றது. அங்கு எங்கெல்லாம் பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றதோ, சென்டர்கள் இருக்கின்றதோ அங்கு மின்சாரம் மற்றும் தண்ணீருக்கான முறையான ஏற்பாடு இருக்க வேண்டும். அது இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

கடந்த சில நாட்களுக்கு முன் நான் அங்கிருந்த சமயத்தில் ஒரு மாநாட்டிற்காக சென்றிருந்த போது புயல்காற்று வீசியது. அப்போது பைத்துர் ரஹ்மான் மிஷன் ஹவுஸ் இருந்த அந்த பகுதியில் மின்சாரம் தடைபட்டு விட்டது. தண்ணீரும் நின்று விட்டது. மின்சாரம் மற்றும் தண்ணீருக்கான எந்த ஏற்பாடும் இல்லை. ஆனால், ஜமாஅத் அளவில் ஜெனரேட்டருக்கான ஏற்பாடு அப்படிப்பட்ட இடங்களில் இருக்க வேண்டும். அதன் மூலம் உடனடியாக ஜமாஅத் கட்டடங்களுக்கு ஒளியூட்ட முடியும். தண்ணீரில்லாத குறையையும் நிவர்த்தி செய்ய முடியும். ஒருவேளை இது இறைவனது நியதியாகவும் இருக்கலாம். சிலர் இதனை இவ்வாறு கருதுகின்றனர். அதாவது அல்லாஹ்வின் தரப்பிலிருந்தே இது எல்லாம் நடக்கின்றது. முதலாவதாக எச்சரிக்கை செய்யப்படும். ஆனால் இவையெல்லாம் எச்சரிக்கை செய்யப்படாத நிலையிலேயே நடந்து விட்டது. சில இடங்களில் எங்காவது தீங்கு விளைவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்திருக்கலாம். அல்லாஹ் இவ்வாறு இதை அகற்றி விட்டான். அல்லாஹ்வே இதைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். ஆனால் நாம் எல்லா நிலையிலும் உலகின் ஒவ்வொரு இடத்திலும் இயன்ற அளவு நமது ஏற்பாடுகளை முழுமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

இப்போது நான் கனடாவின் பக்கம் வருகின்றேன். குத்பா, கனடாவில் கொடுக்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவைப் பற்றிய விசயங்கள் கூறப்படுகின்றன என்று இவர்கள் நினைக்கலாம். அமெரிக்கா

தொடர்பான புகழுக்குரிய எல்லா அம்சங்களும் அங்குள்ள குறைபாடுகள் பற்றியும் கூறிவிட்டேன். இப்போது உங்களைப் பற்றியும் கூறிவிடுகின்றேன்.

இரண்டு நாடுகளுக்கும் தேவையான விசயம் நான் ஏற்கனவே கூறியதுபோன்று அனைத்து ஜமாஅத்துகளும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ்வுடன் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் மட்டுமின்றி உலகிலுள்ள ஒவ்வொரு ஜமாஅத்திடமும் அவர்கள் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் நான் கூறி வருகின்றேன்.

இரண்டாவதாக ஏற்கனவே நான் கூறியது போன்று இந்த கலப்பற்ற மனத்தூய்மையை வெளிப்படுத்தும் காட்சிகளைக் கனடாவிலும் நாம் பார்க்க முடிந்தது. எந்த நாளில் நான் இங்க வந்து சேர்ந்தேனோ அதே நாளில் பாகிஸ்தானிலிருந்தும் அமெரிக்காவிற்கு சென்று விட்டு இங்கு வந்த ஒரு பெண்ணுக்கு அமெரிக்காவிலிருந்தும் தொலைபேசி அழைப்பு வந்தது. வரவேற்பு நிகழ்ச்சிகள் எப்படி இருந்தது? என்று கேட்கப்பட்டது. அமெரிக்க நிகழ்ச்சி சிறப்பானதாக இருந்ததா? கனடா நிகழ்ச்சி சிறப்பானதாக இருந்ததா? எனக் கேட்கப்பட்டது. அந்தப் பெண் அப்போது இங்கு இருந்தது நல்லதாகி விட்டது. அவர் கூறிய பதில் கனடாவாசிகள் அமெரிக்கர்களை மிகவும் பின்தங்க வைத்து விட்டனர் என்பதாகும். எவ்வாறிருப்பினும் அவ்வாறு பின்தங்கும்படி செய்ய வேண்டியது இருந்தது. ஏனென்றால், நீங்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்றீர்கள். இங்கு Peace Village உங்களது சுற்றுச்சூழல் எப்படி உள்ளது என்றால், இங்கு பெரும்பாலான வீடுகள் அஹ்மதிகளின் வீடுகளாக இருக்கின்றது. இதை ஒட்டி பள்ளிவாசலும் இருக்கின்றது. ஆனால் இதிலிருந்தும் பலன்பெறுவதற்கு வெளிப்படையான வரவேற்பு மட்டும் போதாது. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் கருத்தை உங்கள் கண் முன்னால் வையுங்கள். அல்லாஹ் ஓர் இடத்தை உங்களுக்கு தந்துள்ளான். அதில் நீங்கள் ஒன்றாக வசிக்கின்றீர்கள். அந்த இடத்தை ஒட்டி பள்ளிவாசலும் இருக்கின்றது. அந்த பள்ளிவாசலை நீங்கள் நிரப்ப வேண்டும். அதில் தான் அதன் அழகு இருக்கின்றது. அதன் மூலமே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது வெளிப்படும். முதியவர்கள் எப்படியும் இங்கு வந்து விடுவார்கள். பெரும்பாலான முதியவர்கள் ஓய்வு பெற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எந்த வேலையும் இல்லை. அவர்கள் ஒருவேளை ஐவேளை தொழுகைகளுக்கும் வரக்கூடியவர்களாக இருக்கலாம். இறைவணக்கத்தின் உண்மையான நோக்கத்தைப் புரிந்தவாறு சிறுவர்களும், இளைஞர்களும் இங்கு வரும்போதுதான் அசல் நோக்கம் நிறைவேற முடியும். அவ்வாறு பள்ளிவாசல் நிரப்பப்படும் போதும், ஜமாஅத்தின் மரபு நிலைநாட்டப்படும் போதுதான் அசல் நோக்கம் நிறைவு பெறும்.

குமரிப் பெண்களும், மற்ற பெண்களும் தமது இந்த சுற்றுச்சூழலில் இருந்தவாறு தமது புனிதத்தன்மையும் தமது வெட்கத்தையும் பாதுகாத்துக் கொள்ளும்போதுதான் இந்த நோக்கத்தை நாம் அடைய முடியும். இளம் வயதிலுள்ள இளைஞர்களும் தங்களுக்குள்ள தகுதியைப் புரிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும். இந்த சுற்றுச்சூழலின் தாக்கத்தில் மூழ்கிவிடுபவர்களாக இருக்கக் கூடாது. இவ்வாறு இந்த நோக்கத்தைப் பெற முயற்சி செய்யும்போதுதான் அல்லாஹ்வுக்கு உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக ஆக முடியும். அவ்வாறில்லையென்றால், முழக்கங்களைச் செய்வதன் மூலம் ஓரளவு கலப்பற்ற மனத்தூய்மையையும் பற்றையும் நாம் வெளிப்படுத்திக் காட்டி வருகின்றோம். ஆனால் அசல் நோக்கத்தை நாம் பெற முடியாது.

இங்கு உள்ளூர் மக்கள், இங்குள்ள மேயர், அரசியலில் இருப்பவர்கள் என்னை சந்தித்தார்கள். பொதுவாக ஜமாஅத்தைப் பற்றி சிறந்த தாக்கத்திற்கு அவர்கள் ஆளாகி இருக்கின்றனர். பலரும் என்னிடத்தில் எப்படிப்பட்ட மக்கள் உங்களது ஜமாஅத்தில் இருக்கின்றார்கள் என்பதில் உங்கள் ஜமாஅத் தொடர்பாக நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். அவர்கள் சட்டத்தை பெரிதும் பேணி நடக்கின்றார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் அருளால் இவை அனைத்தும் நமக்கு கிடைத்திருக்கின்றது. இவர்கள் உலகத்தின் பார்வை மூலம் நம்மை பார்க்கின்றனர். அதில் அவர்களுக்கு உயர்வான தரம் தென்படுகின்றது. ஆனால் நாம் திருக்குர்ஆனின் போதனைகள் நமக்கு காட்டுகின்ற அந்தப் பார்வையில் நம்மை பார்க்க வேண்டும். இதனை

இந்த காலத்தில் திருக்குர்ஆனின் போதனைகளில் ஒளியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்கள். நமது உயர்வான நல்லொழுக்க தகுதி, மார்க்கத்தில் நாம் நிலைத்திருப்பதற்கான அளவுகோல் ஆகியவை உலகவாதிகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோல் அல்ல. மாறாக, இறைவன் ஏற்படுத்தியுள்ள அளவுகோலாக அது இருக்கின்றது.

அல்லாஹ்வை மகிழ்விப்பதற்கும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் நான் முன்பு கூறியது போன்றே திருக்குர்ஆனின் போதனைகளை நாம் செயல்படுத்த வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

நீங்கள் பூமியின் பக்கமும் பூமியிலுள்ள மக்களின் பக்கமும் பார்க்காதீர்கள். மாறாக வானத்தின் பக்கம் பாருங்கள். பூமி, வானம் ஆகியவற்றின் எஜமானன் பக்கம் பாருங்கள். இவ்வாறான பார்வை இருந்தால்தான் நாம் உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக இருக்க முடியும். இவ்வாறு இருந்தால் தான் நாம் உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக ஆக முடியும். அப்போதுதான் உங்களது வரவேற்பு, முழக்கங்கள், உங்களது ஒவ்வொரு செயல் ஆகியவை இறைவனது திருப்தியைப் பெறக்கூடியதாக இருக்கும்.

அல்லாஹ்வின் அருளால் எனது அமெரிக்கா மற்றும் கனடாவின் சுற்றுப்பயணம் நல்விளைவை தரக்கூடியதாக இருந்திருக்கின்றது. அமெரிக்காவில் பிறந்து அங்கேயே படித்து வளர்ந்துள்ள பெண்களும் இங்குள்ள சுற்றுச்சூழலில் வளர்ந்துள்ள பெண்களும் எனக்கு கடிதம் எழுதியுள்ளனர். நீங்கள் கூறிய விசயங்களைக் கேட்டு எங்களுக்கு ஒரு பெண்ணின் புனிதத்தன்மை, வெட்கம் ஆகியவற்றை பற்றிய உணர்வு எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்போது எங்களது முக்கியத்துவம் பற்றி தெரிந்து விட்டது. பர்தாவின் முக்கியத்துவம் பற்றி தெரிந்து விட்டது. ஓர் அஹ்மதி பெண்ணின் உயர் தகுதி பற்றி தெரிந்து விட்டது என்று எழுதியுள்ளனர். இவ்வாறே இளைஞர்களும் எங்களுக்கு தொழுகையின் முக்கியத்துவம் பற்றி தெரிந்துவிட்டது என்று எழுதியுள்ளனர். சில பெண்கள் புர்கா அணிவது, உடலை மறைப்பது ஆகியவற்றைப் பேணுவது இந்த சுற்றுச்சூழலில் இருந்தவாறு அதை செய்வதற்கான தைரியம் எங்களுக்கு இல்லை என்று நாங்கள் கருதி வந்தோம். ஆனால் உங்களுக்கு முன்னார் புர்கா, கோட் ஆகியவற்றை அணிந்து நாங்கள் வந்த பிறகு உங்களது போதனைகளைக் கேட்ட பிறகு இனி ஒருபோதும் எங்களது புர்காவை கழற்றமாட்டோம் என்று அவர்கள் கூறியுள்ளனர். அல்லாஹ் அவர்களது இந்த சிந்தனையை செயல்ரீதியாக எப்போதும் அவர்களிடம் நிலைத்திருக்கும் படி செய்வானாக! எங்களது புனிதத்தன்மையை பாதுகாப்போம் என்று அவர்கள் செய்த உடன்படிக்கைக்கேற்ப தங்களது புனிதத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்பவர்களாக அவர்கள் இருப்பார்களாக! இவ்வாறே தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்பட்டுள்ளது. சந்திப்புகளின் போது இனி எங்களிடமிருந்து எந்த புகாரும் உங்களுக்கு வராது என்று சிலர் கூறியுள்ளனர். கடிதத்திலும் இதை எழுதித் தந்துள்ளனர். இந்த விசயம் அல்லாஹ்வைப் புகழ்வது, அவனுக்கு நன்றி செலுத்துவது ஆகியவற்றின் பக்கம் நம்மைக் கொண்டு செல்கிறது. உள்ளங்களை திருப்புவதற்கான ஆற்றல் அந்த இறைவனுக்கு தான் இருக்கின்றது. அந்த இறைவனுக்கு தான் இந்த வல்லமை இருக்கின்றது. காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவி சாய்த்தவாறு இந்த இளம்பெண்கள் தங்களிடம் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் எவ்வாறு அவன் அவர்களை இந்த விசயத்தின் பக்கம் குனிய வைத்துள்ளான் என்று பாருங்கள். சமுதாயத்தில் தங்களுக்கு இருக்கும் உயர் தகுதியை அவர்களுக்குப் புரிய வைப்பதற்கு அவர்கள் இப்போது எழுந்து விட்டனர். இந்தப் பெண்கள் தான் சில நாட்கள் முன்பு பர்தாவைப் பேணுவதில் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தனர். சிலர் பள்ளிக் கூடங்களில் இதனால் மிகுந்த கவலைக்கு ஆளாகினர். அவர்கள் இந்த தூய மாற்றத்தை நிலைபெறச் செய்வார்கள். அதற்காக எப்போதும் அவன் முன்னால் குனிந்தவாறு அவனது உதவியை இதற்காகக் கேட்பார்கள் என அவர்கள் உறுதி எடுத்துக் கொள்வதே அவர்கள் நன்றி செலுத்துவதற்கான வழியாக இருக்கும். அவர்களிடம் உருவாகியுள்ள இந்த சிறப்புத் தன்மைகள் அவர்களிடம் நிலைத்திருக்க வேண்டும். எந்த இளைஞர்களிடம் தூய மாறுதல் உருவாகியுள்ளதோ அவர்களும் இந்த மாற்றத்தை எப்போதும் தங்களிடம் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தங்களது வாழ்க்கையை கழிக்க வேண்டும்.

இதற்கு முன்பும் நான் சுருக்கமாக கணவன் – மனைவி ஆகியோரின் கடமைகள், உரிமைகள் பற்றி கூறியிருந்தேன். கணவன் – மனைவி இருவருக்குமிடையில் உள்ள நம்பிக்கையின்மை அகல வேண்டும். இதன் காரணமாக பல உறவுகள் சீர்குலைந்து விட்டது. உண்மையைக் கடைபிடிக்காமல் இருப்பதும் இதற்கு காரணமாக இருக்கின்றது. உண்மையைக் கடைபிடித்தவாறு கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இளைஞர்கள் மத்தியில் புதிதாக திருமண உறவுகள் ஏற்பட்டிருக்கின்றது. தாய் தந்தையர் கூறியதற்கிணங்க நீங்கள் ஒருவரை திருமணம் செய்தால் விசுவாசத்துடன் அந்த உறவை நீங்கள் பேண வேண்டும். அவர்களுக்கு வேறு ஆர்வம் இருந்தால் பையன், பெண்ணின் வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடாது. பெண், பையனின் வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடாது. திருமணத்திற்கு முன்னரே நான் இவரை திருமணம் செய்ய விரும்புகின்றேன் என்று பெற்றோர்களிடம் கூறிவிட வேண்டும்.

எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இஸ்லாத்தில் திருமணத்திற்கான அடிப்படை தூய்மையைப் பேணுவதில் வைக்கப்பட்டுள்ளது. உலக விசயங்களில் அவை வைக்கப்படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நான்கு சிறப்புத் தன்மைகளை ஒரு பெண்ணிடம் பார்த்து ஓர் இளைஞர் திருமணம் செய்கின்றாரோ அவற்றில் எல்லாவற்றையும் விட அதிகமாக மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கும்படி அவர்கள் கூறியுள்ளார்கள். அழகைப் பார்க்காதீர்கள்; செல்வத்தைப் பார்க்காதீர்கள்; குடும்பத்தைப் பார்க்காதீர்கள்; மார்க்கத்தைப் பாருங்கள் என்று கூறியுள்ளார்கள். இளைஞர்கள் மார்க்கத்தைப் பார்க்கும் போது அல்லது மார்க்கப் பற்றுள்ள பெண்ணை திருமணம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றபோது அவர்களும் மார்க்கப் பற்றுள்ளவராக இருக்க வேண்டியது அவசியமானதாகும். இதைப் பற்றி பல்வேறு நிகாஹ் குத்பாக்களிலும் நான் கூறி வருகிறேன். பையனும், பெண்ணும் மார்க்கப் பற்று உடையவராக இருந்தால் தான் உண்மையான மகிழ்ச்சியையும் உண்மையான முறையில் நன்றி செலுத்துபவராக ஆகும் நிலையையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதன் நோக்கமாகும்.

எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நமது அடிப்படை, தூய்மையில் வைக்கப்பட்டிருக்கின்றது. அவை உலக விசயங்களில் வைக்கப்படவில்லை. நீங்கள் இங்குள்ள சுதந்திரமான சுற்றுச்சூழலின் தாக்கத்திற்கு ஆளாகி உங்கள் வாழ்க்கையை அமைதியற்றதாக ஆக்கிவிடாதீர்கள். இந்த மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்று நினைக்காதீர்கள். இந்த தற்காலிக வாழ்க்கையில் சில நாட்கள் வரை அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இறுதி விளைவு அமைதியின்மையாக இருக்கின்றது. எனவே தொடக்கத்தில் இருந்த உங்களது சிந்தனைகளை தூய்மையாக வைத்திருங்கள். அவற்றை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப அமைத்துக் கொள்ளுங்கள்.

நான் ஏற்கனவே கூறியதைப் போன்றே உலகரீதியாக பார்க்கும் பல வீடுகளிலும், குடும்பங்களிலும் சிறப்பான நிலைமை இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளை நினைவில் வையுங்கள். உலக இன்பங்களில், அதன் பொலிவில் மூழ்கி விடாதீர்கள். உங்களது அசல் குறிக்கோளை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். உங்களது கடந்த காலத்தை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். அதன் மீது எப்போதும் உங்கள் பார்வை இருக்க வேண்டும். பிறகு அல்லாஹ் உங்கள் மீது செய்துள்ள அருள்களை நினைத்துப் பாருங்கள். இந்த அருள்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக உங்களை ஆக்க வேண்டும்.

நன்றி செலுத்துதல் என்ற கருத்தை செயல்படுத்துகின்றபோது, இதையும் நினைவில் வைக்க வேண்டும். சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மத்தியில் இருக்கின்ற பகை உணர்வுகளை அகற்ற வேண்டும். இவ்வாறு பகைமையை அகற்றி சமாதானம் செய்து கொள்வதும் கூட அல்லாஹ்வின் அருள்களை சேகரிக்கக்கூடியதாக இருக்கும். அது மனிதனை நன்றி செலுத்தும் அடியானாக ஆக்குகின்றது.

இந்த சுற்றுச்சூழலில் நான் வீட்டிலிருந்து வெளியேறும்போது பெரும் எண்ணிக்கையில் சிறுவர்கள் தெருக்களில் நின்றவாறு, ஸலாம் ஸலாம் என்ற குரல் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் வருவதைப் பார்க்க முடிகிறது. நாரே தக்பீர் முழக்கத்தைக் கேட்க முடிகிறது. இந்த சுற்றுச்சூழலில் சாந்தியைப் பரப்புவதற்காக

இருக்கின்றது. இது சொர்க்கத்திற்கு ஈடான சுற்றுச்சூழலின் பக்கம் சைகையாக சுட்டிக் காட்டுகின்றது. இதை வெளிப்படையான ஸலாத்துடன் மட்டும் தொடர்புடையதாக வைக்காதீர்கள். மாறாக உண்மையான சாந்தி மற்றும் இரட்சிப்பின் வழியாக இதை ஆக்கிக் கொள்ளுங்கள். அதன் மூலம் சொர்க்கத்திற்கு ஈடான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். சிறுவர்கள் நாரே தக்பீர் என்று முழக்கமிடுகின்றனர். கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவற்றை பல்வேறு வகையில் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். பொதுவாக சிறுவர்களிடத்தில் இந்த உணர்வு அதிகமாகத் தென்படுகின்றது. இந்த உணர்வு நிலைத்திருப்பதற்காக அதிகமாக முயற்சி செய்து வாருங்கள். இந்த ஸலாம் மற்றும் முழக்கங்களின் உண்மையான ஆன்மா என்ன என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். பெரியவர்களின் செயல்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக அமைந்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றவும், சகோதர சகோதரிகளின் உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனமும் இருக்க வேண்டும். அபபோதுதான் அந்த ஆன்மாவும் அதற்குரிய உண்மை நிலையும் விளங்கும். இந்த பொறுப்பை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மாநாட்டு ஏற்பாடுகள் தொடர்பாகவும் அமைப்பாளர்களுக்கு நான் கவனமூட்டியிருந்தேன். இது அமெரிக்காவிற்காக மட்டும் நான் கூறியவை அல்ல. மாறாக கனடாவில் உள்ள உங்களுக்காகவும் இதை நான் கூறுகின்றேன். உங்களது குறைகளையும், பலவீனங்களையும் சிந்தித்தவாறு ஒரு பட்டியலை அதற்காக தயார் செய்து அதை ரெட் புக்கில் இடம்பெறும்படி செய்யுங்கள். அடுத்த வருட நிகழ்ச்சிகளை தயார் செய்யும் போது இந்த விசயங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

பல்வேறு இடங்களிலிருந்து புகார்கள் அடங்கிய கடிதம் எனக்கு வந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக இந்த முறை மூன்று நாட்களும் சப்தம் சரியாக கேட்காத நிலை, ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சனையாகவே இருந்து வந்தது. ஒரு நீண்ட காலக்கட்டமாக நீங்கள் இந்த இடத்தில் மாநாடுகளை நடத்திய பிறகும் ஏன் இந்த பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்று எனக்கு புரியவில்லை. தவறு ஏற்பட்டு விட்டது. இது இல்லாமல் இருந்தது. அது இல்லாமல் இருந்தது என்று நாவால் கூறுவது மட்டும் போதுமானதாகாது. இதற்கான காரணம் என்ன என்பதை கண்டறிய வேண்டும். அதன் மூலம் வருங்காலத்தில் இந்த தவறு ஏற்படக் கூடாது. அமைப்பாளர்களாக பொறுப்பில் இருந்த சில பொறுப்பாளர்களுக்கு இடையில் சரியான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு இல்லாமல் போனதே இதற்கான காரணம் என்று நான் நினைக்கின்றேன். இதே நிலை நீடித்தால் ஜமாஅத் பணிகளில் பரக்கத் ஏற்படாது. ஜமாஅத் சகோதரர்களிடம் காணப்படும் மனத்தூய்மையில் எந்தக் குறைவும் இல்லை. ஆனால், பொறுப்பாளர்களும் எங்கு குறை இருக்கின்றது? எந்த நிய்யத்தில் அவர்கள் பணியாற்றுகின்றனர் என்று கண்காணிக்க வேண்டும்.

யார் மீதும் தேவையில்லாமல் நம்பிக்கை வைக்கக் கூடாது. இங்கு மாநாடு நடத்தாமல் இருப்பது சிறந்தது என்று நான் பெண்களின் மாநாடு நடைபெற்ற சமயத்தில் கூறியிருந்தேன். அடுத்த சொற்றொடரை நான் கூறவில்லை. மாறாக, நான் என்ன நினைத்தேன் என்றால் இங்குள்ள நிலைமையை மாநாட்டு அமைப்பாளர்களால் கையாள முடியாமல் போனால், நான் கலந்து கொள்கின்ற ஆண்டில் வட அமெரிக்கா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும் மாநாடுகளை அமெரிக்காவிலேயே வைத்து நடத்தி விடலாம். உங்களது செலவும் மிச்சப்படும். பிரச்சனைகளும் குறைந்து விடும். இரண்டு நாடுகளுக்கும் தங்களது சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் ஏற்பட்டு விடும்.

எவ்வாறிருப்பினும், நான் கனடாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களின் கலப்பற்ற மனத்தூய்மையைப் பார்க்கும் போது பொறுப்பாளர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பமும் வழங்க வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது. அவர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். எந்த பொறுப்பாளர்களின் மூளையில் வெறும் உலக நோக்கங்கள் பதிந்துள்ளதோ அவர்கள் குறிப்பாக தங்களை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தால் அவர்களே தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். யாருக்கும் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஆண்களிலும், பெண்களிலும் இதே நிலைதான் இருக்கின்றது. எப்போதும் நினைவில் வையுங்கள்.

நல்லெண்ணம் தான் பணிகளில் பரக்கத்தை ஏற்படுத்தும். சுயநலமும், சுய லாபத்திற்காக செய்யும் பணிகள் ஆகியவை அடுத்த தலைமுறையையும் சீர்குலைத்து விடும். உங்களையும் நன்றிகேடு காட்டுபவர்களாக ஆக்கி விடும். பிறகு அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகுவதற்குப் பதிலாக அவனது தண்டனைக்கு காரணமானவர்களாக நாம் ஆகி விடக் கூடாது. இறைவன் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! ஆனால் புதிய தலைமுறையிடமும் நான் கூறுகின்றேன். அவர்கள் தங்களை விட பெரியவர்களிடம், அவர்களிடம் உள்ள தீமைகளைப் பார்க்காதீர்கள். அதே சமயத்தில் அவர்கள் செய்கின்ற எல்லாவற்றையும் நன்றாக செய்கின்றார்கள் என்றும் கருதிவிடாதீர்கள்.

நல்லவற்றையே எப்போதும் பார்க்க வேண்டும். குறிப்பாக இளைஞர்களின் பார்வை அதன் பக்கமே எப்போதும் இருக்க வேண்டும். தொடர்புகளை நிலைநாட்டுவதில் கனடாவிடம் சிறப்பான நிலை ஏற்பட்டுள்ளது அல்லது முன்னதாக இருந்து வந்த தொடர்புகளை நிலைபெறச் செய்து, அதை மேலும் அவர்கள் வளர்த்து வருகின்றார்கள் என்று நான் அறிகிறேன். அவர்களில் சிறந்த இயல்புள்ள மக்களை இந்த முறை என்னை சந்திக்க வைத்துள்ளனர். இதற்கும் சாதகமான விளைவுகள் ஏற்படும்படி அல்லாஹ் செய்வானாக!

அமெரிக்காவிலும் இளைஞர்களின் உழைப்பினால் தொடர்புகள் ஏற்பட்டன. இங்கும் ஏற்பட்டன. குறிப்பாக அமெரிக்காவிலுள்ள இளைஞர்கள் இதற்காக நன்றாக பணி செய்துள்ளனர். இந்த தொடர்புகளையும், உங்களது ஒவ்வொரு செயலையும் எப்படி செய்து முடிக்க வேண்டும் என்றால் அதன் விளைவாக அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச்செய்தியை எட்ட வைப்பதற்கான வழி திறந்துவிட வேண்டும். இதுவே நமது நோக்கமாகும். இதைப் பெறுவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நன்றி செலுத்துவதன் உணர்வை இறைவன் முன்னால் வெளிப்படுத்திக் காட்டுவது செயலளவில் இருக்கும். அன்பை வெளிப்படுத்தும் வகையில் இது ஒரு தற்காலிக உணர்வாக இருந்துவிடக் கூடாது. வீட்டில் ஒளி விளக்குகளால் அலங்கரிப்பது, தெருக்களில் இருக்கின்ற பொலிவு, டியூட்டி கொடுப்பதற்காக தம்மை அர்ப்பணிப்பது ஆகியவை தற்காலிக உணர்வுகளாகும். ஆனால் காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொறு கூற்றுக்கும் செவிசாய்த்தவாறு அதற்கேற்ப செயல்படுவதே நிரந்தரமான அன்பின் வெளிப்பாடாக இருக்கும். இந்த மேற்கத்திய நாடுகளில் இது கஷ்டமான விசயம்; அது கஷ்டமான விசயம் என்ற கேள்வி எழக்கூடாது. உறுதியான எண்ணம் இருந்தால் எந்த துன்பமும் நமக்கு முன்னால் வராது. முன்னேறுகின்ற சமுதாயங்கள், புரட்சியைக் கொண்டு வரும் சமுதாயங்கள் கஷ்டங்களைப் பார்ப்பதில்லை. மாறாக, தங்களது திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் அவை பார்க்கின்றன. சிந்தனை மாற்றம் மட்டுமே தேவைப்படுகிறது. இந்த விசயம் தான் உலகில் நாம் புரட்சியைக் கொண்டு வருவதற்கு காரணமாக இருக்கும். இந்த சிந்தனையுடன் வாழ்க்கையைக் கழிப்பவர்களாக அல்லாஹ் உங்களை ஆக்குவானாக! அல்லாஹ் ஜமாஅத் சகோதரர்களுக்குரிய உரிமையை சரியாக செலுத்திக் கொண்டே செல்வதற்கான நல்வாய்ப்பை எனக்கும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL ISLAM MOSQUE, CANADA.

**ON 13.07.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456